# FASTING & PRAYER FOR WANNI PEOPLE

**St.** Marys Church, Jaffna was the scene of an ecumenical gathering on Sunday the First of August to fast and pray for the suffering people of Wanni.

Roman Catholics. Methodists Anglicans and C S I Christans assembled to pray to God to save the people of Wanni from famine, devasation and aerial bombardment.

A meditation on the theme "A message to Wanni" was conducted by the members of Our Lady Refugee Church.

St. James Gurunagar Church conducted a meditation on the theme 'A message to Jaffna' "A message to our leaders" was the theme of Passaiyur Catholic Church.

The Jaffna Christian Union conducted a meditation on the "Promises of God" Most Rev Dr. Thomas Savundranayagam, Catholic Bishop of Jaffna gave the introductory message. C. S. I. Bishop Jebanesan spoke on the "Promises of God".

At the end it was resolved to send a petition to the President of Sri Lanka about the situation in Wanni.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 14 th August 1999 No. 16

*RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


# THREE NEW PRESBYTERS

Three Deacons of Jaffna Diocese of the Church of South India were ordained Presbyters on Saturday the 17th July 99 at the Cathedral Church, Vaddukoddai. They are Rev. G. D. Mynaseelan, Rev. A. K. Surendren and Rev G. N darajah.



### Rev. A K. Surendran

Rev A. K. Surendran was born at Karaveddy in Vadamarachi He completed his Diploma in Theology Course at Theological Seminary. Maruthanamadam in 1993. He served as Worker in Charge Mahilchi-



puram, in Vanni Area, Erlalai North and Erlalai South. At present he is serving as Worker in Charge, at Udupiddy. His wife is Mrs. Emi Ajitha Surendren. The Surendrans have a son 5 years old.

### Rev. G. D. Mynaseelan

Rev. G. D. Mynaseelan was born at Udupiddy and had his education at Jaffna College. He completed his Diploma in Theology at Christan Tehological Seminary, Maruthanamadam in 1993. Rev. Mynaseelan served as Assistant Pastor, Colombo Church and Worker in Charge, Samathanapuram, Akkarayan in Vanni district. He is now Worker in Charge, Annaikoddai and Gandhijikeramam Church CenterHis wife is Mrs. Anne Arulgunajothy. The Mynaseelans have an infant daughter.

### Rev. G. Nadarajah

Rev. G. Nadarajah was born at Ragalla in the Newra Eliya District. He had his education at Jaffna College and Bishop's



Heber College, Trichy. He holds B. A., B. Com., B. D. (II nd Class) degrees. He will be completing his M. A. of the Maduri Kamaraj University, this year. At present he is Worker in charge, Karainagar. His wife is Mrs. Nalayini Nadarajah. The Nadarajahs have two sons and a daughter.

# "VEMBADI 1999" IN TORONTO

The Alumni Association of Vembadi Girls' College in Toronto organised an interesting and colourful Tamil Cultural Festival for the first time on Saturday the 19th of June at the Sir John A. Macdonald Collegiate Hall to a full house of appreciative alumni and well wishers. From all accounts the varied festival was a grand success. The audience was kept enthralled with nostalgic memories of a school and homeland sadly left behind. There was not a dull moment from 5. 30 p. m. when the show started to its end at 11 00 p. m!

The programme began with the singing of the College Hymn. "Dare to do right, dare to be true " It was followed by the Canadian National Anthem "O Canada!" an anthem sung with great feeling and gratitude by an immigrant community given a new lease of life. The traditional two minutes silence honouring all those who have passed away in our homeland due to the violent ethnic conflict there, followed. The welcome address was delivered by Mrs. Ranji Thambirajah, the President of the Association, a former principal and educationist in the Educational Service in Sri Lanka.

Light carnatic music was rendered by an alumnus Sangeetha Vithwan. Prema Sriskandarajah. Well trained students of varying age groups from Vasantha Daniel's School of Dancing - "Natyakalalaya" presented an array of exquisite dances of high quality. There were two dramatic skits portaying some social problems of Tamil immigrants in Canada a folk dance and instrumental music of Tamil melodies "Then and Now" contributed by talented artists old and young. The last half hour was enlivened by the singing of Nithi Kanagaratnam from Australia introduced as the "Father of Tamil Pop Music." Nithi an alumnus of Vembadi in the primary school paid a tribute to his teachers before rendering his now well known and relished Tamil "pop" songs caricaturing life in the Tamil homeland.

The vote of thanks was given by Mrs. Chelvi Elanganayagam the General Secretary of the Association. Old Centralites helped with the organization. The President and members of the Association deserve the congratulations of all concerned for the fine streamlined function and hope very much that it will be an annual event. Mrs. Rajaranam, Principal Emeritus of Vembadi Girls' College who was at the helm of affairs guiding and protecting Vembadi ably and courageously during some of its darkest periods in the 1980 also graced the festival with her presence.

A. R. K

## Shops will be Closed on Sundays

The Traders Association of Atchuvely has decreed that the shops in the Atchuvely area should be closed on Sundays.

This decision was made after representations made by the employees in the shops.

Earlier shops in the Atchuvely area were doing business on Sundays also.

## *Government Agents Transferred:*

Mr. R. Tharmakulasingham G. A. Mullathivu and Mr. T. Rajanayagam, G. A. Killinochchi have been transferred with immediate effect. Mr. S. Suntharam Additional G. A. Mullaithivu has been appointed G. A. of the District. while Mr. S. Ayathurai, District Secretary, Killinochchi assumes duties as G. A. Killinochchi.

## A Bullock Cart Race

A bullock cart race was organized by the Kopay North Community Centre in aid of its Library on Sunday the 1st of August 1999.

# யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் நடாத்தும் போட்டிகள் 1999

01 கட்டுரைப் போட்டி

| பிரிவு | சொற்கள் | தலைப்பு | நேரம் |
|---|---|---|---|
| 12 வயதின் கீழ் | 200 | 'இறைவனும் மனிதனும்' | 1 மணி |
| 16 ,, | 300 | 'நானும் இதர சபை மக்களும்' | 1 மணி |
| 20 ,, | 400 | 'சபைப் பிரிவுகளால் நற்செய்திப் பணிக்கு ஏற்படும் சவால்' | 1 மணி |
| 20 வயதின். மேல் | 500 | 'இயேசுவின் போதனையின் அடிப் படையில் திருச்சபையின் ஒருமைப்பாடு / ஐக்கியம் | 1 மணி |

02. கதைப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 16 வயதின் கீழ் | 1 பக்கம் | 'சபை ஒன்றிப்பு நோக்கி' | 1 மணி |
| 20 வயதின் கீழ் | 1 பக்கம் | 'சபை ஒன்றிப்பு நோக்கி' | 1 மணி |
| 20 வயதின் மேல் | 1 பக்கம் | 'சபை ஒன்றிப்பு நோக்கி' | 1 மணி |

03 அருளுரைப் போட்டி

16 வயதின் கீழ்) ☆ பேசவேண்டிய நேரம் 8 - 10 நிமிடம்
20 வயதின் கீழ்) ☆ பேசவேண்டிய தலைப்பு 1 மணித்தியா
20 வயதின் மேல்) லயத்திற்கு முன் கொடுக்கப்படும்

04. மனனப் போட்டி

| | |
|---|---|
| 12 வயதின் கீழ் | மத்தேயு 7 ம் அதிகாரம் |
| 16 வயதின் கீழ் | மத்தேயு 6 ம் அதிகாரம் |
| 20 வயதின் கீழ் | மத்தேயு 5 ம் அதிகாரம் |
| 20 வயதின் மேல் | மத்தேயு 17 ம் அதிகாரம் |

05. நாடகப் போட்டி

☆ சபை ரீதியாக நடாத்தப்படும் நாடகத்தில் குறைந்தது 6 கதாப் பாத்திரங்கள் இருக்க வேண்டும்.

☆ நாடகம் சபை ஐக்கியத்தை வலியுறுத்தும் நாடகமாக இருக்க வேண்டும்

☆ நாடக நேரம் 18 முதல் 20 நிமிடம் வரை

☆ நாடக பிரதி சபைக் குருவால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்

06. **Memory Verses in English**
New International Version Same Chapters

விண்ணப்பங்கள் 03 09 - 99 க்கு முன்னர் காரியதரிசி, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்

வண ஏ. ஏ. போல்
தலைவர்

வண என். ஜே ஞானப்பொன்ராஜா
காரியதரிசி

## மறுமை பிரவேசம்

### றோஸ் பரிமளநாயகம்

திருமதி றோஸ் பரிமளநாயகம் அற்புதராஜா (முன்நாள் ஆசிரியை அச்சுவேலி மகாவித்தியாலயம்) தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் பரிமளநாயகம் அற்புதராஜா அவர்கள் 18 - 7 - 99 ஞாயிறன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் காலம் சென்ற திரு திருமதி சண்முகம் துரையப்பாவின் அன்பு மகளும், சிறில் அற்புதராஜாவின் அன்பு மனைவியும் வண மதன்ராஜ் (ஜேர்மனி) சந்திரராஜ் (புத்தளம்) சகுந்தலா தேவி (அவுஸ்ரேலியா) காலம் சென்ற சுகுணராஜ் ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். அன்னாரது நல்லடக்க ஆராதனை 21 - 7 - 99 வியாழனன்று மாலை 4. 00 மணிக்கு கொழும்பில் நடைபெற்றது.

அன்னாருடைய வாழ்வுக்கும் ஜீவியத்துக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை 'ஆனந்த அவனியு' டுவிலில் வசிக்கும் திரு. எஸ் ஆர் யேசுபாலன் அவர்களுடைய இல்லத்தில் அச்சுவேலி திருச்சபையின் சேகரக்குரு வண T தேவநேசன் அவர்களால் நடாத்தப்பட்டது. வண D R அம்பலவாணர் அவர்களுடைய ஆரம்ப ஜெபத்துடன் ஆராதனை ஆரம்பமானது. அச்சுவேலி திருச்சபை ஊழியன் அருட்சகோ P தேவராஜா அவர்கள் திருமறைப் பாடத்தை வாசித்தார். குடும்பத்தினரால் ஒரு விசேட பாடல் பாடப்பட்டது. அன்னாரது மகள் சகுந்தலாதேவி அவர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து அனுப்பிய அனுதாபச் செய்தி உடுவில் திருச்சபை ஊழியன் வண A S தேவகுணானந்தன் அவர்களால் வாசிக்கப்பட்டது. திருமதி கிருபா பவசிங்கம் அவர்கள் இரங்கலுரையாற்றினார். தெல்லிப்பழைத் திருச்சபையின் ஊழியர் அருட்சகோதரி டெய்சி ஆசீர்வாதம் அவர்கள் ஜெபத்திலே வழி நடத்தினார். பேராயர் பேரருள் மிகு கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்கள் 'காணபடுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகள்' நித்தியமானவை 2 கொரி 4 : 18) என்ற பொருளில் அருளுரையாற்றினார். இறுதியில் வண T தேவநேசன் போதகர் அவர்களுடைய செபத்துடனும் பேராயர் அவர்களுடைய இறையாசியுடனும் நன்றி செலுத்தும் ஆராதனை'' நிறைவு பெற்றது.

# எஸ். ஜே. எழுதுவது

வருந்தி மழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா- இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து

துஞ்சுவதே மாந்தர் தொழில்

நல்வழியிலுள்ள இப்பாடல் மனுஷனுடைய ஆற்றமையையும் விரக்தியையும் எடுத்துக்கூறுகின்றது. எமக்குக் கிட்டாத செல்வம், சுகம் புத்திரபாக்கியம், புகழ், என்பனவற்றைப்பெற எவ்வளவு பாடுபட்டாலும் அவை கிடைக்க மாட்டா. அதுபோல நம்மிடம் பொருந்தியிருக்கும் நோய், அயலவர் பகை, வறுமை என்பனவற்றை விரட்ட எவ்வளவு பாடுபட்டாலும் அவைபோகக் போவதில்லை. வாழ்நாள் எல்லாம் இல்லாதனவற்றிற்கு ஏங்கி இருக்கும் தொல்லைகளைப் பற்றி வருந்தி பின்னர் மரணத்தைத் தழுவிக் கொள்வதே மனிதர் தொழில்.

Things unattainable are not attained however hard one may strive tor them; those one ought to have come to



him willy nilly. Meanwhile it is man's lot to make his heart fester by much thinking and then to die off at last.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையை நினைத்துப்பார்த்தால் இது உண்மை போலவே தென்படும்! இது சிறந்த செய்யுள். ஆனால் இதிற் காணப்படும் நம்பிக்கை வரட்சி மனிதனுக்கு கெடுதலையே உண்டு பண்ணும்.

கிறிஸ்துவின் அடியார்களுக்கு இப்படியான விரக்தி ஏற்படுவதுண்டு. நான் சமீபத்தில் வெளிநாட்டுப்பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்த பொழுது ஒரு பெண்மணி, கவிஞர் ரெனிசனின் வசனங்கள் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் உண்மையில் அப்படியா காரியங்கள் நடைபெறுகின்றன்? என்று கேட்டார்.

ரெனிசன்

உலகத்தாரின் கனவிலும் பெரிதே உண்மையான ஜெபத்தின் பயன்கள் என்று பாடியுள்ளார்.

"More things are wrought by prayer
than this world dreams of'

இயேசு பிரான் ஜெபத்தின் வல்லமையைப் பற்றி பின்வருமாறு கூறினார்.

'கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம். உங்களால் கூடாத காரியம் ஒன்று மிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்''

மத் 17 : 20

இதற்கு விளக்கம் தருகின்றார் நோர்மன் வின்சன்ற் பீல் என்ற அறிஞர்

உங்களுக்கு சொற்ப விசுவாசம் இருந்தால் போதும். சடுகளவு இருந்தாற் காணும். அந்தளவு விசுவாசத்தை வைத்துக் கொண்டு இந்த மலையளவு தடையை, உங்கள் வழியை மறைத்து உங்கள் முயற்சிகளை மழுங்சடிக்கும் தடங்கலை நீக்க வேண்டும். என்று கேட்டுக் கொண்டால், அது நீங்குவது மட்டுமன்றி கடலுக்குள்ளும் வீசப்படும் அதாவது கண்ணுக்குப் புலனாகாதவாறு மங்கிப் போய்விடும்! இதனை உங்கள் உள்ளத்தில் சிறிதளவேனும் சந்தேகிக்காமல் விசுவாசியுங்கள். உங்கள் அடிமனதில் தோல்வி. யுணர்வை வளர்த்துக் கொள்ளாமல் நம்புவீர்களானால் அது அப்படியே ஆகும்.

நம்பிக்கை வரட்சி தோல்விக்கு உறுதியான வழி என்கிறார்.

நோர்மன் வின்சென்ற் பீல்

## திருவும் அருள்திருவும்



அருள்திரு: திருப்பூர் மக்களை நினைக்க எனக்கு வேதனையாக விருக்கின்றது. கிறிஸ்மஸ் காலத்தில் அவர்களுக்கு நமது சபை என்னத்தைக் கொடுக்கலாம், என்று தினந்தோறும் யோசித்து யோசித்து வேதனைப் படுகின்றேன்.

திரு: உங்களையே கொடுத்து விடுகின்றோம். நீங்கள் போய் விடுங்கள்.

மணி மாறன்

## மூன்று சிற்றூழியர்கள் இளைப்பாறினார்கள்

யாழ்ப்பாணக்கல்லூரியில் நீண்டகாலமாக பணியாற்றிய திரு பொ. கந்தையா திரு. வி. வீரசிங்கம் திரு S தேவதாசன் ஆகியோர், இவ் வருடம் இளைப்பாறினார்கள். இவர்களை பாராட்டும் வைபவம் இம் மாதம் 30 ம் திகதி யாழ்ப்பாணக்கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெற்றது.

## துணை அதிபர்...

இவர் முதலில் யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்ப பிரிவின் அதிபராகவும் பணியாற்றினார். விஞ்ஞானக் கல்விகூடைப்பந்தாட்டம் பெண்கள் வழிகாட்டிகள் இயக்கம், கிறிஸ்தவ மாணவர் இயக்கம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைத்தார்.

குட்டக் குட்ட குனிந்த தலை
கொஞ்சம் நிமிர்ந்து பாக்குது
குட்டிய கை இரண்டும்
தன்னைத்தானே தூக்குது
— பட்டுக்கோட்டை

## வன்னியின் அவலம்

ஒரு மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இரணைகோச நடவடிக்கையைத் தொடர்ந்து, வன்னிப் பிரதேசம் துண்டிக்கப் பட்டு விட்டது. அங்கு என்ன நடைபெறுகின்றது? மக்கள் எப்படி வாழ்கிறனர்? வைத்திய சேவைகள் எவ்வாறு நடைபெறுகின்றன? விமானத் தாக்குதல்கள் நடைபெறுகின்றனவா? என்பதைப்பற்றி நாம் ஒன்றும் அறியாதவர்களாகவேயிருக்கிறோம். அங்கு அல்லற்ப்படும் அனைத்து மக்களும் தமிழ் மக்கள், 'தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும்'' என்பார்கள். வன்னி மக்களின் அவலத்தை குறித்து நாம் ஒவ்வொருவருமே மனம் கலங்கி நிற்கின்றோம்.

வன்னியில் வாழுகின்ற மக்கள் பெரும்பாலும் ஏழை மக்கள். 1958, 1977, 1981, 1983 கலவரங்களைத் தொடர்ந்து அங்கு குடியேறிய இந்தியவம்சாவழி மக்கள்; விவசாயத் திட்டங்களில் குடியேறுவதற்காகச் சென்ற தீவுப் பகுதி மக்கள்; அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பூர்வீக குடிகள்; 1995 ம் ஆண்டு நடைபெற்ற சூரிய கதிர் நடவடிக்கையைத் தொடர்ந்து இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு பயந்து அங்கு சென்று குடியேறியவர்கள்; இந்த மக்கள் கடந்த 9 வருடங்களாக அனுபவித்து வரும் தொல்லைகளை வார்த்தைகளால் எடுத்துக் கூற முடியாது. வீடுகள் இல்லை. பெரும்பாலான மக்கள் சிறு சிறு கொட்டில்களில் வசிக்கின்றனர். ஆடைகள் இல்லை; ஒரு சில ஆடைகளையே திரும்பத் திரும்ப தோய்த்து தமது மானத்தை காப்பாற்றுகின்றனர், வேட்டையாடத் தடை, மீன்பிடிக்கத் தடை விவசாயம் செய்ய இடமில்லை. கூனிக் குறுகி வாழ்க்கையின் அர்த்தத்தையே மறந்து விட்டார்கள். இன்பம் என்ற சொல்லைக் கேட்டதுண்டு அது என்றாவது எங்கள் வீட்டுப்பக்கம் வந்ததுண்டோ என்ற பட்டுக்கோட்டையாரின் வரிகளே நமது ஞாபகத்திற்குவருகின்றன.

இந்த நிலையிலே யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் என்ன செய்யமுடியும்? அரசாங்கத்திற்கு திரும்பத் திரும்ப சொல்லியும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கடவுளிடம் முறையிடுவதே ஒரே வழி என்ற நோக்கத்தோடு யாழ் பெரிய கோயிலில் மக்கள் கூடினார்கள். அனைத்து கிறிஸ்தவ மக்களும் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்தனர். அங்கு ஒரு மகஜரை தயாரித்து ஜனதிபதிக்கு அனுப்புவதென்று முடிவு செய்தார்கள். ஏதோ நம்மால் இயன்றதை நாம் செய்ய வேண்டும். வன்னி வாழ் மக்கள் தாம் செய்யாத தவறுகளுக்காக தண்டிக்கப்படுகின்றனர். இதனை உலகத்தாருக்கு சொல்லுவதற்கும் நம்மால் முடியாதிருக்கின்றது. இறைவனை வழிபடுவோம். தமிழா கடவுளை நம்பு! உனக்கு நல்ல காலம் வருகின்றது, என்ற மகாகவி பாரதியின் வசனங்களை நினைவு கூர்ந்து வன்னி மக்களை நமது ஜெபங்களில் நினைப்போமாக!



# கவலையை மறக்க வேண்டுமா?

டேல் கார்னாகி சொல்வதனைக் கேளுங்கள்

1 ஒவ்வொரு நாளையும் தனித்தனிக் கூறுகள் என்று நினைத்து வாழுங்கள் நேற்றைய. தவறுகளும் நாளைய பயங்களும் இன்றைய நாளின் மகிழ்ச்சியைக் குறைக்காதவாறு பாருங்கள்.

2 துன்பம் நெருங்குகிறது என்று கண்டால் இதனால் எனக்கு அதிகபட்சம் எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்று கணக்குப்பார்த்து அதனைக் குறைப்பதற்கு வழிபாருங்கள்.

3 துன்பத்தை எதிர்கொள்ளத் தெரியாத நிர்வாகிகள் தொழிலதிபர்கள் விரைவில் இறந்து போவர் என்று அடிக்கடி நினைவு கூருங்கள்.

4 துன்பம் உங்கள் உள்ளத்தில் இடம் பிடித்து விடாதபடி வேறு வேலைகளில் ஊக்கமாக ஈடுபடுங்கள். வேலைதான் ஆறுதல் என்பதனை ஒரு போதும் மறந்து போகாதீர்கள்.

5 சிறிய விஷயங்கள் உள்ளத்திலே இடம் பிடித்து விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

6 பற்றவர்கள் முன் குதூகலமாய் இருப்பதனைப் போல் நடியுங்கள். உண்மையிலே குதூகலம் உங்களை வந்தடையும்.

7 உங்களுக்குப் பிடிக்காத வர்களைப்பற்றி ஒரு நிமிஷமாவது சிந்தித்து நேரத்தை வீணாக்காதீர்கள்.

8 இயேசுபிரான் பத்து குஷ்டரோகிகளைச் சுகப்படுத்தினார். ஆனால் ஒருவர்தான் அவரிடம் சென்று நன்றி செலுத்தினார். ஆகவே நன்றியுணர்வினை பெரும்பாலனவர்களிடம் எதிர்பார்க்காதேயுங்கள்.

9 பணம் இல்லை. என்கிறீர்களே? உங்கள் கண்களுக்கு கோடி ரூபாய் தருகிறேன், என்றால் கொடுப்பீர்களா? உங்களிடம் உள்ள சொத்துக்களை எண்ணிப் பாருங்கள்.

10 உங்களது தனிப்பண்புகளைக் காப்பாற்றுங்கள் இன்னொருவரைப் போல ஆகிவிட முயற்சிக்காதீர்கள்.

11 கையில் உள்ள பொருளெதுவோ அதனைக் கொண்டு முன்னேறப்பாருங்கள். விரக்தியினால் அதனை வீசிவிடாதீர்கள். கையில் இல்லாத ஒன்றுக்கு அழாதீர்கள்

12 உங்கள் துன்பங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு மற்றவர்களைச் சிரிக்கச் செய்யுங்கள்

13 மற்றவர்கள் உங்களைத்தாக்கிப் பேசும் போது உங்களைப் பற்றி மற்றவர்கள் பேசுகின்றனர் என்று மகிழ்ச்சியடையுங்கள். ஒன்றும் பேசாதவனையும்ஒன்றும் செய்யாதவனையும் பூஜ்யத்தையும் தான் மக்கள்விட்டு வைக்கின்றனர்.

14 களைப்பு ஏற்படுமுன் இளைப்பாறச் சென்று விடுங்கள்.

15 எந்த நகரிலும் பட்டினத்திலும் கிராமத்திலும் தனிமையான தேவாலயங்கள் சிற்றாலயங்களைக் கண்டால் அங்கு சென்று இறைவனிடம் உங்கள் துன்பங்களைச்சொல்லி முறையிட்டு விட்டுப் போங்கள்.

வட்டுக்கோட்டைச் செய்தி

## துணை அதிபர் இளைப்பாறினார்

யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட்ட துணை அதிபராக கடந்த 5 வருடங்களாக பணியாற்றிய திருமதி S· P குலசிங்கம் அவர்கள் இம் மாதம் 29 ம் திகதி தமது பதவியில் இருந்து இளைப்பாறினார். அவர் யாழ்ப்பாணக்கல்லூரியில் கற்று, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் புகுந்து அங்கு B. Sc. படிப்பை முடித்தார். பின்னர் யாழ்ப்பாணக்கல்லூரியின் ஆசிரியராக பதவியில் அமர்ந்து கடந்த 37 வருடங்களாக பணியாற்றினார்.

(2 ம் பக்கம் பார்க்க)

## புதிய அதிபர்

### அ அ போல்

யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக வண அ அ போல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பதவி ஏற்பார் எனத் தெரிகின்றது. யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவராகிய வண அ. அ. போல் அவர்களுக்கு இப்போது 52 வயதாகின்றது. இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் இரசாயனத்தை விசேட பாடமாகக் கற்று பட்டதாரி ஆயினார். பின்னர் இரசாயனத்தில் M Phil பட்டமும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் டிப்லோமா பட்டமும் பெற்றார். செரம்பூர் பல்கலைக் கழகத்தில் B D பட்டமும் பெற்றார். 1996 ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைகழகத்திற்குச் சென்று அங்கு Th M பட்டத்தை பெற்றுக் கொண்டார். பல்கலைகழக படிப்பு முடிந்த பின்னர் சிறிதுகாலம் இரசாயன விரிவுரையாளராக பணியாற்றினார். 1970 ம் ஆண்டு புல்மோட்டையில் உள்ள கனி வள கூட்டுதாபனத்தில் இரசாயன பகுப்பாய் வாளராக சேர்ந்து கொண்டார், 1985 ம் ஆண்டு யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியராக பதவி ஏற்றார். 1991 ம் ஆண்டு டீக்கனாகவும் 1992 ம் ஆண்டு குருவாகவும் அபிசேகம் பண்ணப்பட்டார். கடந்த ஐந்து வருடங்களாக யாழ்ப்பாணக்கல்லூரியின் கனிஸ்ட்ட துணை அதிபராக பணியாற்றி வந்துள்ளார்.

## துணை அதிபர்

யாழ்ப்பாணக் கல்லூரியின் துணை அதிபராக திரு நோவல் விமலேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சாவச்சேரி டிறிபெக் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றவர். 1970 ம் ஆண்டு பேராதனை பல்கலைக் கழகத்தின் B Sc பட்டத்தை பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் டிப்லோமா பட்டம் பெற்றார், இவர் 1988 ம் ஆண்டு சுவிட்சலாந்தில் உள்ள அனைத்து திருச்சபைகள் நிறுவனத்தில் பயிற்சி பெற்று திருச்சபைகள் ஒருமைப்பாடுகள் குறித்த சான்றிதழ் பெற்றார். 1998 ம் ஆண்டு லண்டன் பல்கலைகழகத்தை சேர்ந்த கிங்ஸ் கல்லூரியில் கணனித்துறையில் MA பட்டம் பெற்றார்.

திரு நோயல் விமலேந்திரன் யாழ்ப்பாணக் கல்லூரியின் இடைநிலை பிரிவின் தலைவராக பணியாற்றி வருகிறார். சிறிது காலம் துணை அதிபராகவும் பணியாற்றி இருக்கின்றார்.

## வை. எம். சி. ஏ. ஸ்தாபன யாழ். கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு நவாலி வை எம் சி ஏ மண்டபத்தில் 24 - 7 - 99 சனிக்கிழமை முழு நாட் கூட்டமாக நடைபெற்றது பின்வருவோர் இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கினர்,

திரு என் அன்புராஜ்
சகோ எஸ் ஸ்ரீபன்ராஜ்
திரு எஸ் விஜயகுலசிங்கம்
திரு நோ அ விமலேந்திரன்
பேராயர் எஸ் ஜெபநேசன்
திரு வி மித்திரரஞ்சன்
திருமதி கி பவசிங்கம்

உதயதாரகைப் பத்திரிகை அடுத்த வாரம் கேள்வி - பதில் பகுதியை ஆரம்பிக்க விருக்கின்றது.

உங்கள் கேள்விகளை தாரகை மாமா உதயதாரகை, கல்லூரி ஒழுங்கை வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்புக

## MORE TEARS

"To Him our land shall listen
To Him our land shall kneel
All rules be on His shoulders
All wrongs beneath His heel"

The ongoing ethnic conflict in Sri Lanka has led to the death of another illustrious son of the Island. When the bomb exploded on that fatal day something much more than a man died in the dust and sand of Rosmead Place at Colombo 7. Not only was Neelan killed that day, but something very precious to Sri Lanka died with him.

Neelan Thiruchelvam was one of the most brilliant lawyers of Sri Lanka, in recent times. International law was his meat and drink. But he was able to take to politics in which sphere he performed much service to the Government of Sri Lanka. Neverthe less because of his intellectual brillance, cultural standards, and charm of his manners he enjoyed a status peculiar for a politician of being popular not merely with those who agreed with him but also with those who did not.

We do not wish to comment here on his political ideology, his vision for the Tamil Community and on his activities here and abroad on behalf of the Government of Sri Lanka. He sincerely believed that the course he was pursuing was the only way to find lasting solution to the ethnic problem in Sri Lanka.

Neelan came from a well educated and highly respected family. His father Mr. M. Thiruchelvam Q. C., was one of the most distinguished civil lawyers of Sri Lanka who held the position of Solicitor General for many years.

He was also one of the ablest and most devoted servants of the Tamil cause. Neelan's mother Punitham had great leadership qualities. The part played by her in the International Assocation for Tamil Research Conference in 1974 will not be easily forgotten by the Tamil people.

Thiruchelvam family was devoid of caste, race and religious predjudices Neelan himself chose Sithi Deen a Muslim lawyer to be his partner in life.

We are indeed sad that the civil strife in Sri Lanka had caused the end of many brillant minds.

Neelan's career will be remembered for the amount of achievements crowded in its short span.

Who cannot but regret that a career of such promise had been cut short in its prime. Neelans death as President Clinton said it demonstrates the compelling need for a lasting solution.



## LEO TOLSTOY

Leo Tolstoy was well known in Russia and in many countries of the world as a great writer in the 19th century. He was also a very brave soldier, winning awards for his fighting with the Russian army in the Crimean War.

At the best time of his life he started to think about why he was doing all that he had been doing. He could not stop thinking about death, and how it makes everything that we think is important now, seem like a waste of time. He wanted to find something that would bring meaning to both life and death. The effect of all this thinking was that he changed his whole way of living.

What he found was not at all difficult to understand; but it seemed to him at times that he was the only person in the world who was saying it. Between 1877 and 1885, Tolstoy studied the story of Jesus and the teaching of the church. "Confesion", "what I believe" and the story of Jesus in Tolstoy's own words, are the only important things that he wrote in those years, between the time when he was 49 years old and when he was 57.

Some powerful people in Russia tried to stop people from reading what Tolstoy had say to in these works, but more books were secretly printed by hand in Rusisa and others were printed outside Russia and carried secretly across the boarders. These were handed from person to person without Tolstoy's enemies knowing about it. The Church and the Government had no answer to the powerful arguments that Tolstoy made in these works; and a few years later both the Russian Church and the Russian government were destroyed.

Today, a hundred years later, it seems that the world has forgotten what Tolstoy said, just as they have forgotten what Gandhiji said, and what Jesus Christ said. We are living in a spiritually dark time, when very few people will think seriously about what God wants them to do with their lives, and when almost everyone is out to get all that they can for themselves. Tolstoy warned people when he was alive that, if the leaders of the world did not find a faith in God that was bigger than any church or government, they would end up destroying themselves. Today we seem much closer to doing just that.

Dav d Mckay

### Annual Sports Meet Montessori J. D. C. S. I. Chavakachcheri

The above Sports Meet was held in the Church grounds at 2.30 p. m on 2nd July 1999. It Commenced with prayer by Bro Daniel Ranjit, worker, J D C S I Usan. The Chief Guest Mrs. Parameswary Sundralingham, In Service Advisor (Pre-School Education) declared opened the Sports Meet by hoisting the School flags There were many events including musical drill and Fancy dress.

The Parish Priest Rev T. H. Vasanthakumar spoke well of the Montessori and the training given to the Children.

The Chief Guest in her address told that it was a real joy to be in children's midst in that evening. She appreciated the manner in which the Children had been trained. Then, she congratulated the head mistress of the school on the excellent performance shown by the children.

The sport meet was well attended by parents, parishners and well wishers. The Chief Guest gave away the certificates and trophies.

Mrs. Loji Satkunasingham the head mistrees of the school proposed the vote of thanks. The sports meet came to an end with benediction pronounced by the Parish Priest.

## JCIT Passes the Quarter Century mark

The Jaffna College Institute of Technology (JCIT) has gone through a quarter century from its inception.

The currently run courses are Diploma in Computer Programming & Data Processing. Diploma in Telecommunications & Electronics, Certificate courses in Computer Business Applications word, Excel, Access & Power Point), Certifcate Course in Visual Basic, Australian Computer Society Classes and Craft Courses in Electrical Wiring & Installation practice Automobile Technology, Welding and Radio & T V. Servicing

Exemptions are given by Open University of Sri Lanka for a person who has completed any of it's Diploma Programs.

JCIT's computer dept. is currently functioning from 464 Hospital Road, Jaffna and the other courses from its main centre in Vaddukoddai. The computer dept. is growing fast with computer education has become a must for many although people of Jaffna are a bit isolated from the present infor mation world A few of its past students were recently recruited by UNDP in Jaffna for their computer skills.

The student intake for its craft courses has increased a bit d spite the military presence in its premises. The staff in a small scale along with the students do contracted home jobs in electrical wiring & motor vehicle repairs

More students should enroll in its Diploma Program in Telecommunications & Electronics, which were re-started after a lapse of nearly three years since this field, is also picking up in Jaffna We are planning to re-start the Diploma Program in Civil Engineering when the new semester commences in early September.

— N. Hoole

### A Book on Tamil Grammar

Urai Nadai Thelivu" a book on Tamil Grammer written Vidivan Sockan and his daughter Miss Vasuki Sockan was formally released on Wednesday the 28th July 1999 at Inuvil Central, College, Bishop S Jebanesan, Mr S Pathmaanathan and pandit Panchcharam reviewed the Book. The first copywas bought by Mr V. Thevapopalan.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 13th August 1999 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.